தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 சனவரி 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. பெரியண்ணன், ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை, ஆர். ராகவ மேனன் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரம்பலூர், ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957-இலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. பெரியண்ணன் அவர்கள் 16—12—1971-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தென்காசி தொகுதியிலிருந்து தேர்நதெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1952-லிருந்து 1957-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 9—1—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பாலக்காடு கிராமப்புற பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1946-இலிருந்து 1952-ஆம் ஆண்டுவரை உறுப்பினராகவும், மற்றும் 1946-லிருந்து 1947-ஆம் ஆண்டுவரை திரு. பிரகாசம் அவர்களுடைய அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராகவும் இருந்த திரு. ஆர். ராகவ மேனன் அவர்கள் 20—1—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும், இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(அவையினர் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மருத்துவக் கல்லூரியில் பல்நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி

*1 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரியில் பல் வைத்தியப் பிரிவு, கட்டாய உதவிச் சம்பளப் பயிற்சி திட்டத்தின் கீழ், பல்நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி ஒன்றை அளிக்கின்றதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?